**இலங்கை திறந்த பல்கலைக்கழகம் - 2018**

-----------------------------------------------------------------

1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

---------------------------------

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்த 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்மீது எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்

-----------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயவெல்லை

-------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை

| உரிய நியமத்தின் தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரசத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் காட்டப்படாமை காரணமாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா.149,950,000 ஆன 11 காணிகள் மற்றும் பெறுமதி ரூபா.236,567,269 ஆன நூலகப் புத்தகங்களில் நியாயமான பெறுமதி (Fair Value) வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நூலகப் புத்தகங்களை மீள்கணிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு-ள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் நூலகத்திற்குரிய எல்லா நூல்களையும் பௌதீக ரீதியாக கணக்கிடப்பட்டது. ஆயினும், அந்த புத்தகங்களின் பெறுமதியை மதிப்பிடும் பணியின் பொருட்டு அதிகளவிலான காலம் எடுப்பதால் 2018 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுகளில் மீள்கணிப்பீட்டு பெறுமதி வெளிப்படுத்த முடியவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம், நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன், சொத்துக்களின் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்தவதற்கு நட-வடிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| உரிய நியமத்தின் தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டு இறுதி இருப்புகளின் மீதி பௌதீக ரீதயாக கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுகளில் குறிப்பிடுதல் நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கை எனினும், பிரதான களஞ்சியத்தின் ரூபா.5,594,534 ஆன பேரேடு கணக்கில் இருப்புகளின் மீதியை அடிப்படையாகக்கொண்டு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | பிரதேச மற்றும் கற்கை நிலையங்களில் நூல்களின் இருப்பு மீதி கணக்கி-டுகையில் பௌதீக மீதி, புத்தகங்களின் மீதியுடன் ஒப்பிடப்படும். இந்த பணி 2019 ஆம் ஆண்டு தொடக்கம் முறையாக மேற்கொண்டு அது தொட-ர்பான தகவல்களையும் கணக்காய்விடம் வழங்குவ-தற்கு நடவடிக்கை | கணக்கீட்டு கொள்கை பிரகாரம், கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

மேற்கொள்ளப்டும்.

### 1.5.4 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| உரிய நியமத்தின் தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.34,847,854 ஆன புலனாகாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டு கடன் கழிப்பிற்கு பணியாற்றியிருக்கவில்லை. | புலனாகாத சொத்துக்களின்கீழ் OMIS Network முறைமைகள் மற்றும் E-books ம் உள்ளடக்கப்படுகின்றன. OMIS முறைமை 10 ஆண்டுகள் முழுவதும் பல்கலைக்கழகத்தில் நடைமுறைப்படுவதுடன், ஏனைய முறைமைகள் மற்றும் E-books தொடர்பிலும் அவற்றின் ஆயுட்காலம் தொடர்பாக உறுதியான சான்றுபடுத்தல் மேற்கொள்ளுதல் சிரமமாகும். | எல்லா புலனாகாத சொத்துக்களையும் அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில உள்ளடக்குவறத்கும், பயனுள்ள ஆயட் காலம் தொடர்பாக அடையாளம் காணப்பட்டு கடன் கழிப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமத்தின் தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ம் ஆண்டு வரை உடன்படிக்கைகளை மீறப்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா அலுவலர் குழாத்தின் 14 பேர்களிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய மொத்தம் ரூாப.48,085,752 ஆன தொகையில் எதுவித பணமும் மீளாய்விற்கான ஆண்டு வரை அறவிடப்படவில்லை என்பதுடன், உடன்படிக்கைகளை மீறிய மேலும் 15 அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா.35,521,351 ஆன மொத்த உடன்படிக்கை பெறுமதியில் ரூபா.18,499,495 தொகை முன்னரான ஆண்டு தொடக்கம் அறவிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் அந்த அலுவலர்களிடம் எதுவித தொகையும் அறவிடப்படவில்லை. | ஆரம்ப கடன்கொடுநர்கள் மற்றும் பிணையாளர்கள் வழங்கியுள்ள முகவரி-களை விட்டுச் சென்று உள்ளபடியாலும். தற்கால முகவரிகளை கண்டறி-வதற்கு இயலாத படியாலும், 06 அலுவலர்-களுக்கு வழக்கு தொடருவதற்கு முடியாது-ள்ளது. அதேபோன்று சில அலுவலர்களுக்கு வழக்கு தொடருவதற்கு நடவடி-க்கை மெற்கொள்ளப்பட்டு வருவதுடன், சில அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத் தொகையினை தவணையாக அறவிடுவத-ற்கும், சில அலுவலர்களி-டமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத் தொகையினை ஊழியர் செமலாப நிதியத்திலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | அலுவலர்ளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத் தொகை அறவிடுவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | அலுவலர் குழாத்தின் 56 பேர்களிடம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடப்படாத ஊழியர் கடன் | இந்த அறவிடப்படாத ஊழியர் கடன் தொகை-யில் 06 ஊழியர்களுக்கு ஏற்புடையதாக ரூபா. | தொடர்புடைய கடன் தொகை அறவிடுவதற்கு துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | | |
|---|---|---|
| மீதி ரூபா.2,497,789 ஆவதுடன், அதனுள் நிறுவனத்தை விட்டுச் சென்ற அலுவலர் குழாத்தின் 47 பேர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா.1,754,223 ம் காணப்பட்டது. | 6,400.00 ஆன கடன் தொகை தவிர்ந்த, எஞ்சிய கடன் தொகையை வழங்கல் மற்றும் நிதி சுற்றறிக்கை இலக்கம் 40 மற்றும் 59 இன்படி, ஊழியர் சேமலாப நிதியத்தை விடுவித்துக்-கொள்கையில் அறவிடு-வதற்கு பல்கலைக்கழ-கத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வேண்டும். |

1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர் | இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| (i) நிதி ஒழுங்குவிதி 751(1) | பிரதான அலுவலகத்-திலிருந்து வழங்கிய பாடநெறிப் புத்தகங்கள் மற்றும் கற்கை பொருட்கள் தொடர்பில் பிரதேச கற்கை நிலையங்களில் இருப்புகளின் புத்தகங்களை பேணிச் செல்லப்படவில்லை. | பாடநெறிப் புத்தக-ங்கள் மற்றும் கற்கை பொருட்கள் என்பவ-ற்றின் இருப்புகளை பேணுவதற்கு கணினி மென்பொருள் அறிமு-கப்படுத்தியுள்ளதுடன், அதனை தற்போது இற்றைப்படுத்தி பேணிசசெல்லப்படுகிறது. | நிதி ஒழுங்கு-விதிபடி நட-வடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி ஒழுங்குவிதி 756 மற்றும் 757 | வருடாந்த பொருட் மெய்மையாய்வினை மேற்கொண்டு அவ்வறிக்-கைகளில் பிரதிகளை கணக்காய்வாளர் அதிப-தியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 236,567,269 தொகை செவிலான நூலகப் புத்தகங்கள் மற்றும் ரூபா.4,748,975 தொகை செலவிலான பட்டப்படிப்பு உடை (லோகுவ) தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை . | 2018 ஆம் அண்டில் நூலகப் புத்தகங்கள் மற்றும் பட்டப்படிப்பு உடை (லோகுவ) என்பவ-றுக்கு பொருட் மெய்யாய்வுகளை மேற்கொள்ளப்பட்-டுள்ளது. நூலகப் புத்தகங்கள் தொட-ர்பாக மெய்யாய்வு சபையிடமிருந்து வழங்கிய பரிந்துரை-களுக்கமைவாக மேற்ககொள்ள வேண்-டிய நடைமுறைகள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கட்டுப்பாட்டு சபையிடமும் விடயங்-களை சமர்ப்பிக்க-ப்பட்டுள்ளதுடன், அதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியும் கிடக்கப்பெற்றுள்ளது. | |
| (ஆ) | பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவனத்திற்கான தாபன விதிக்கோவையில் | | | |
| (i) | XX ஆவது அத்தியாயத்தில் 3.1 பிரிவு | நிறுவனத்தின் சேவையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு நபர்களதும் வருகை மற்றும் வெளியேறல் குறிப்பிடப்பட வேண்டு-மாயினும், பல்கலைக்-கழகத்தில் கல்விப் பிரிவில் அலுவலர்களின் பொருட்டு வருகை பதிவேடு பேணிச் செல்லப்படவில்லை | இதற்காக பல்கலை-க்கழக முறைமையில் மாற்றங்களை ஏற்படு-த்தல் வேண்டும். இது தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற COPE கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டுள் ளதுடன், அதற்கு ஒரு முறைமையினை | பல்கலைக்க-ழக தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுத ல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்பதுடன், வருகை உறுதிப்படுத்திக் கொள்ளாது சம்பளம் சம்பளம் மற்றும் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | தயாரிப்பறத்கு உயர் கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரும் இணங்கியுள்ளனர். | |
| (ii) | XXVI ஆவது அத்தியாயத்தின் 3.2 மற்றும் 3.3 பிரிவு | வருடாந்த பொருட் மெய்மையாய்வு ஊடாக அடையாளம் காணப்படும் நிலையான சொத்துக்கள் காணமல் போதல் தொடர்பிடல், புலனாய்வு செய்த பின்னர் ஏற்புடைய பற்றாக்குறை, காணமல் போதல் அல்லது பாதிப்புக்குள்ளாதல் தொடர்பாக பொறுப்பு கூற வேண்டிய நபரிடமிருந்து அதனை மீள்தாபிப்பதற்கான பெறுமதியினை அறவிட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. | இருப்புகளின் மெய்மையாய்வு அறிக்கைகளின் பின்னர் கணக்காய்வு பிரிவிடம் அறிவிக்கப்படும் பற்றாக்குறை மற்றும் நிலையான சொத்துக்களின் காணமல்போதல் மற்றும் கிடைக்கப்பெறாமை தொடர்பில், கிடைக்கப்பெறும் அறிக்கைகளின்படி எதிர்வருங் காலங்களில் பணியாற்றுவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழக தாபன விதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கையில் 1.1.7 ஆம் பிரிவு | அலுவலரொருவர் இடமாற்றம் பெற்று வந்து 02 மாதங்களுக்குள் அல்லது அலுவலர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்களின் பின்னர் திணைக்களங்களுக்கிடையில் தீர்க்கப்படாத கடன் மீதிகளை சீராக்குவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டுமாயினும், அதற்கு முரணாக 08 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா .490,794 | வேறு பல்கலைக்கழகமொன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 03 அலுவலர்களுக்கு ஏற்புயைடதாக சீராக்ப்பபடாத கடன் மீதிகள் உள்ளன. அந்த கடனை தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பி வைக்கபபட்டுள்ளன. | உரிய சுற்றுநிருபம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சீராக்கப்படவில்லை. | இந்த மீதியை 2019 ஆம் அண்டில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை தற்போதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2010 ஆம் ஆண்டு திசெமப்ர் 27 ஆந் திகதிய OU/F/IC/01 ஆம் இலக்க துணைவேந்தர் அவர்களால் வழங்கிய ஆலோசனைக் கோவை | முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் சீராக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், 2018 ஆம் அண்டில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா.1,221,719 தொகையிலான 40 முற்பணங்களை சீராக்குவதற்கு 60 நாள் விஞ்சியிருந்தது. | தாங்கள் குறிப்பிடப்பட்டுள்ள முற்பணத் தொகைகளில் 31 முற்பணத் தொகையினை 2018-02-28 தொடக்கம் 2018-04-17 வரை பல்கலைக்கழக ஊழியர்களின் பணி பகிஷ்கரிப்பு காரணமாக ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சீராக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணத் தொகையினை முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் சீராக்கப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றறேன். | உரிய ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

2. நிதிசார் மீளாய்வு

---------------------------

2.1 நிதிசார் விளைவு

-------------------

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைவு ரூபா. 337,287,562 தொகை பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 125,553,169 ஆகும். அதன்படி நிதிசார் விளைவில் ரூபா. 462,840,371 தொகை வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் மாணவர் வருமானம் ரூபா. 388,718,248 ஆல் குறைவடைதலும், குறுகிய கால கற்கைநெறியின் வருமானம் ரூபா. 29,891,638 ஆல் குறைவடைதலும் மேற்படி விழ்ச்சியடைதலுக்கு காரணங்களாகியிருந்தன.

2.1 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்விற்கான ஆண்டில் நடைமுறை விகிதாசாரம் 0.9:1 ஆனதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36 % ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது.

3. தொழில்பாட்டு மீளாய்வு

3.1 அடையாளம் காணப்பட்ட குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மிகையாக புத்தகங்கள் அச்சிடுதல் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் கிரயம் ரூபா.21,283,087 ஆன ரூபா.121,248 புத்தகங்கள் அகற்று-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முன்னரான ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மெய்மை-யாய்வில் புத்தகங்களின் மிகை, மத்திய புத்தகங்கள் விநியோகிக்கும் நிலையத்தில் உள்ளதாக அவதானிக்கபட்டுள்ளது. இவ்வாறு புத்தகங்களின் மிகை ஏற்படுவதற்கு கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் செய்த எல்லா மாணவர்களும் பதிவு செய்யாமை, பதிவுகளின் பொருட்டு வருகை தருவார்கள் என்று மாணவர்களின் எண்ணிக்-கையை சரியாக தீர்மானிப்பதன் சிரமம் மற்றும் கற்கைநெறிகளின் தரம் அதிகரிப்பதற்கு அவ்வப்போது திருத்தங்களுக்கு உள்ளாதல் வேண்டும் போன்ற விடயங்கள் காரணமாகியது. சரியாக எதிர்வுகூறல்களை மேற்கொண்டு புத்தகங்களின் மிகையை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அத்தியவசியமற்ற புத்தகங்கள் அச்சி-டுவதை தவிர்ப்பறத்கு பிராந்திய நிலை-யங்களில் தகவல்கள் பெற்றுக்கொள்ளும் முறை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தியபோதும் சட்டரீதியாக உரித்துகளை சுவீகரிக்கப்படாத 11 காணிகளில் ரூபா.266,539,328 பெறுமதியிலான கட்டிடங்களை நிருமாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்தக் காணிகளை சுவீகரித்துக் கொள்வறத்கு மீளாய்விற்கான ஆண்டு வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | காணிகளில் சட்டரீதயிான உரித்துகளை பெற்றுக்கொள்வறத்கு பல்கலைக்கழகம் எப்போதும் நடவடிக்கை மேற்கொள்கின்றது. | காணிகளில் சட்டரீதியான உரித்துகளை பெற்றுக்கொள்வறத்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு பீடங்களினதும் கற்கை நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக ரூபா. 306.3 மில்லியன் பெறுமதியிலான கட்டிடத்தில் ரூபா 133.2 மில்லியன் பெறுமதியிலான உபகரணங்களுடன், கல்வி தொல்நுட்பம் மற்றும் ஊடகப் பிரிவு (CETMe) தாபிக்கப்பட்டிருந்தது. அதன்மூலம் வர்த்தக நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு வெளியக நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்க முடியுமாக இருந்த போதிலும் அதில் வருமானம் உழைப்பதற்கோ மாணவர்களின் பயன்பாட்டுக்கோ பயனுள்ளதாக பயன்படுத்துவதற்கு கணக்காய்வு | கற்கை பீடங்கள் கற்புலன் - செவிப்புலன் கற்கை பொருட்களை தயாரிப்பதற்காயினும், முன்னர் இருந்து இந்த நிறுவனத்தில் தொழில்நுட்ப உபகரணங்களின் பேணல் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு வருமானம் உழைப்பதற்காக பங்களிப்பை வழங்குவதற்கு, வருமானம் ஈட்டும் நிறுவனமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நேரிட்டது.<br><br>05 ஆண்டுகளுக்கு முன்னராக ஊடக மண்டபத்தின் ஒலிக்கூடம் வாடகைக்கு வழங்குவதன்மூலம் போதியளவிலான வருமானம் ஈட்டியிருப்பினும், தற்போது வெளியக அலைவரிசைகள் புதிய ஒலிகூடங்களை நிருமாணித்து பயன்படுத்துவதால் கேள்வி வீழ்ச்சியடைவதற்கு காரணமாகியுள்ளது. | மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளின் பொருட்டு ஆகக்கூடியதாக பயன்கொள்வறத்கு பொருத்தமான முறைமை தயாரித்தல் வேண்டும். அதேபோன்று வெளியக தரப்புகளுக்கு உரிய ஒலிகூடங்களை வாடகைக்கு வழங்குவதன்மூலம் வருமானம் உழைப்பதற்காக பிரச்சாரம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வறத்கு பணியாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திகதியான 2019 அம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (இ) 2010 ஆம் அண்டில் தாபிக்க்பபட்டிருந்த தேசிய கணினியுடன் நேரடித் தொடர்பு தொலைதூர கல்வி சேவையில் நிருவாக நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டு மாரச் மாதம் 1 ஆந் திகதியில் தறிந்த பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டதுடன், தற்போது பல்கலைக்கழகத்தில் ஒரு கட்டிடத்தில் அப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டம்மூலம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூபா.100,757,839 ஆன வருமானம் ஈட்டியிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் வருமானம் உழைக்ககூடிய வகையில் பயன்படுத்துவதற்கு தவறவிடப்பட்டிருந்தது. | பல்கலைக்ககழகத்தனி வலையமைப்பு முறைமையுடன் இணைத்த அதன் நடவடிக்கைகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு ஓராண்டு காலம் எடுத்தது. தொழில்நுட்ப சேவைகளை உரியவாறு வழங்குவதற்கு தடைகள் ஏற்பட்டதால் இந்த நிறுவனம் அமைச்சின்கீழ் நிலவிய காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானத்தை ஈட்டுவதற்கு முடியவில்லை. பல்கலைக்கழகத்திடம் கையளிக்கபபடும் சந்தரப்பத்தில் இங்கு பயன்படுத்திய தொழில்நுட்ப உபகரணங்களை பழுதுபார்ப்பதற்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு அமைச்சு இணக்கம் தெரிவித்திருப்பினும், பின்னர் அந்த பணத் தொகையினை வழங்கவில்லை. ஆகையால் பழைய கற்புல செவிப்புல கருத்தரங்கு வசதிகளின் பொருட்டு பயன்படுத்திய உபகரணங்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவறத்கு பல்கலைக்கழக நிருவாகத்திகு நேரிட்டது. | தொழில்நுடப் உபகரணங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பழுதுபார்ப்பறத்கு முடியுமான உபகரணங்களை பழுதுபார்த்து மிக பயனுள்ளவாறு பேணிச் செல்வதன் ஊடாக கருத்திட்டத்தின் எதிர் பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 தொழில்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிமுறை கோவை (Norms) பிரகாரம் பொதுவாக 04 | தற்போது பல்கலைக்கழகத்திற்கு உரியதாக ஏறத்தாழ 1000ம் பாடநெறிகள் உள்ளதுடன், ஒரு பாடநெறியில் பொதுவாக 25 | பல்கலைக்ககழகத்தின் கற்கை நெறிமுறை கோவை பிரகாரம் (Norms) பிரகாரம் |

| | | |
|---|---|---|
| ஆண்டுகளுக்கொரு முறை எல்லா பாடநெறிகளையும் மீண்டும் திருத்தங்களுக்கு உட்படுத்தி இற்றைப்படுத்த வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பாடநெறிகள் தொடர்பில் அவ்வாறான திருத்தங்கள் (Course Revise) மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், தாமதக் காலம் 02 ஆண்டுகள் தொடக்கம் 24 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதயினைக் கொண்டிருந்தது. | பாடங்கள் உள்ளன. ஆகையால் பாடநெறிகளுக்க ஏற்புயைடதான எல்லா பாடங்களும் 25,000 இற்கு அதகிமாக உள்ளது. எல்லா கற்கை பணியாற்தொகுதி Norms ஏற்புடையதாக மேற்கொள்ள வேண்டிய ஆகக்கூடிய பாடங்கள் 04 அண்டு காலப் பகுதிக்குள் 6,000 ம் அளவாகும். ஆகையால் இதன்மூலம் பாடநெறிகள் ஒவ்வொரு 04 ஆண்டுகளுக்கொரு முறை திருத்தம் செய்வதற்கு இயலாது என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும் தேவையான சந்தர்ப்பங்களில் கற்கை நெறிகளை திருத்தம் செய்வதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. | நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.4 பயனற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொலைதூர கல்வி கருத்திட்டம் (DEMP) மூலம் பல்கலைக்கழகத்திடம் 2009 ஆம் ஆண்டில் வழங்கியிருந்த ரூபா.1,580,000 பெறுமதியிலான சிறிய பொலிதீன் பொதிகள் தயாரிக்க முடியுமான இயந்திரம் வழங்கிய திகதி தொடக்கம் மற்றும் மேலும் மற்றுமொரு பல்கலைக்கழகத்திற்குரிய 128 நிலையான சொத்துக்கள் 2 ஆண்டுகள் தொடக்கம் 7 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதி | பொலிதீன் பொதியிடல் இயந்திரம் பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் கணினிப் பிரிவிடம் வழங்கப்பட்டுள்ளது. | பயன்படுத்த முடியுமான மற்றும் முடியாத சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

பயனற்று இருந்தது.

## 3.5 தாமதமாகிய கருத்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுகாதார விஞ்ஞான பீடத்தில் ஐந்து மாடி கட்டிடம் நிருமாணிப்பதற்கு 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 11 ஆந் திகதி ரூபா. 402.5 மில்லியன் தொகை பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அன்று தொடக்கம் 02 ஆண்டுகளில் நிருமாணிப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்த வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் இறுதி திகதியிலும் நிருமாணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | சுகாதார விஞ்ஞான பீடத்தின் ஐந்து மாடி கட்டிடம் நிருமாணிக்கும் கருத்திட்டம் தொடர்பாக பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு நிருமாணிக்கும் (Design & Build) முறைமையின்கீழ் அமைச்சரவையால் நியமனம் செய்யப்பட்ட பெறுகை குழுமூலம் (SCAPC) மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் அதாவது விலை கோரல் ஆவணங்கள் தயாரித்தல் 2017 ஆம் ஆண்டு இறுதி காலாண்டில் முடிவுறுத்தப்பட்டதுடன், தற்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அமர்வுகளை நடாத்தி ஒப்பந்தம் அளிப்பறத்கு அனுமதி பெற்றுக்கொள்ளும் பொருட்டு அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தெரிவு செய்த ஒப்பந்தக்காரரிடம் அளிப்பறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களை தாமதமின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | கல்வி பீடத்தின் ஆறாவது மாடியில் கூரை பழுதுபார்க்கும் ஒப்பந்தம் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் ரூபா. .5,392,936 தொகை செலவிடப்பட்டிருப்பினும், 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் தகிதி வரை உரிய பணி | உரிய ஒப்பந்தம் மேற்கொள்கையில் சுமனசேகர கன்ஸ்ட்ரக்ஷனஸ் (தனியார்) கம்பெனி (ஒப்பந்தக்காரர்களால்) மேற்கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளை மீறியதன்மீது ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. அதற்கு ஏற்புயைடதான சட்ட நடவடிக்கைகள் மேற்- | |

| | | |
|---|---|---|
| முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதுடன், நிதிக் கூற்றுகளில் மேற்கொள்ளும் வேலைகளின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | கொள்ளப்படுவதாக குறிப்பிடுகின்றேன். மேலும் கட்டிடம் நிருமாணிப்பதற்கு ஏற்புடையதான எஞ்சிய வேலைகள் முற்றுமுழுதாக முடிவுறுத்தப்பட்டள்ளது. | |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் கல்விசார் பணியாற்தொகுதியில் 112 வெற்றிடங்களும் கல்விசாரா பணியாற்தொகுதியல் 162 வெற்றிடங்களும் நிலவியதுடன், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதுமான அளவில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | சுகாதார விஞ்ஞான பீடம் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பிடம் என்பவற்றுக்கு ஆட்சேர்ப்புகளை செய்து முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், கல்வி பீடத்தின் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. எஞ்சிய கல்வி பிரிவுகளின் பொருட்டு பத்திரிக்கை அறிவிப்பு வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.<br>நிருவாக பணியாற்தொகுதியை ஆட்சேர்ப்புச் செய்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுமூலம் மேற்கொள்ளப்படுகிறது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

4. கண்கீட்டு நெறிமுறையும் நள்ளாளுகையும்

4.1 இணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் தயாரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், நிறுவனத்தின் முழுமொத்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு ஏற்புடையதாக திட்டங்களை பயன்படுத்தல்மீது உயர் முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இணைந்த திட்டம் றம்றும் செயற்றிட்டம் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தி பொது திறைசேரியிடம் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக்கொண்டு பொது திறைசேரியால் ஒதுக்கீடுகள் வழங்கப்படுகின்றன. | பல்கலைக்கழகம் தாபிப்பதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவெற்றிக்கொள்வதற்கு முடியுமான வகையில் இணைந்த திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

4.2 செயற்றிட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்விற்கான ஆண்டுக்கு எற்புடையதாக செயற்றிட்டம் தயாரிக்கையில் பல்கலைக்கழகத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை தெளிவாக அடையாளம் காணக்கூடியவாறு தயாரிக்கப்படவில்லை. | செயற்றிட்டம் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தி பொது திறைசேரியிடமும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பொது திறைசேரியால் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. | பல்கலைக்கழகம் தாபிப்பதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியுமானவாறு செயற்றிட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

4.3 முகாமைத்துவ தகவல் முறைமையின் விளைவுத் திறன்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ தகவல் முறைமை பொருட்டு (OMIS) ரூபா.3,000,000 தொகை செலவிடப்பட்டு 05 பிரிவுகளில் நடவடிக்கைகள் தொடர்பில் 05 மொடியுள்களின்கீழ் தாபிக்கப்பட்டிருப்பினும், அந்த முறைமையில் நிலவிய குறைப்பாடுகள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை | 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும்போது புதிய தகவல் தொழில்நுட்ப முறைமை வெளியிடுவதற்கு (Development) புதிய பணியாற்தொகுதியை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு உரிய அடிப்படை வேலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | பல்கலைக்கழகத்தின் தேவைகள் பிரகாரம் சரியானதும் வினைத்திறனுடன் கூடியதுமான தகவல் முறைமையினை தாபிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

4.4 வரவு செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| வரவு செலவு மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவினம் உண்மையான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்பட்டு 32% தொடக்கம் 1,379% வரை அளவு ரீதியாக ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டமையால் வரவு செலவு பதிவேடு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டு காரணியாக உபயோகப்படுத்தவில்லையென அவதானிக்கப்படுகிறது. | கடந்த ஆண்டுளில் உண்மையான செலவு மற்றும் எதிர்வுகூறல்களை அடிப்படையாகக்கொண்டு எதிர்வரும் ஆண்டுக்கு மதிப்பீடுகளை தயாரிக்க வேண்டுமென்பதுடன், அந்த மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் உண்யைமான செலவுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம். ஆயினும் இந்த ஏற்றத்தாழ்வுகள் மேலும் குறைத்தக்கொள்வறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வரவு செலவு திட்டம் தயாரிக்கையில் நிதிக் கட்டுப்பாடு மேற்கொள்ளும் நோக்கத்தில் அதனை மேற்கொள்ளுதல் வேண்டும். கடந்த ஆண்டுகளில் உண்மையான புள்ளிவிபரங்களின் அடிப்படையிலும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வறத்கு பொருத்தமான வகையிலும் ஆவணங்ளை தயாரித்தல் வேண்டும். |

4.5 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான அபிவிருத்தி தொடர்பாக தேசிய வரவு செலவு திணைக்களம் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுடன் தொடர்புடைய 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பல்கலைக்கழகம் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணப்பட்டிருப்பினும், அதற்கு ஏற்புடையதான திட்டங்களை உள்ளடக்குதல், திருப்பங்களை அடையாளம் காணல், செயலாற்றுகை, சுட்டிகளை அடையாளம் காணல் தொடர்பான தகவல் முறைமையினை தாபித்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றப்படவில்லை. | ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக திறந்த பல்கலைக்கழகம் அறிந்துள்ளது. | நிலையான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதன்மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |